மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த விகிதம் வரையறுக்கப்பட்டபோது அந்தந்த ஊர்களிலுள்ள ஜனத்தொகை அளவில் விவரம் என்னிடமிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அந்த விகிதங்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டன. ஏதாவது ஊரில் ஜனத்தொகை ஏறிவிட்ட பிறகு தகவல் கிடைத்து அது பற்றி சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்லப்படுமானால் அது திருத்தியமைக்கப்படுவது கவனிக்கப்படும்.

Stray cattle in City

* 43. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : will the Hon. the Chief Minister we pleased to state the steps proposed to be taken to stop the stray cattle menace in the residential areas in Madras City?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொது இடங்களில் அல்லது தனியார் இடங்களில் திரியும் கால்நடைகள் 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 23-வது, 60-வது பிரிவுகளின்கீழ், பிடிக்கப்பட்டு, பல்வேறு காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டிகளில் அடைக்கப்படுகின்றன. கால்நடைகளுக் குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்டுச் சென்றால், பட்டியில் வைத்திருந்ததற்காக, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி இவை ஒவ்வொன்றுக்கும் 50 காசு வீதமும், ஏனைய விலங்கு ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் கட்டணம் வசூலிக்கப் படுவதுடன், அடைக்கப்பட்டிருந்த விலங்குகளைப் பேணி வருவதற்கான செலவுத் தொகையும் உடைமையாளரிடமிருந்து வசூலிக்கப்படும். கால்நடைகளுக்குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்கப்படவில்லை என்றால், அவை பொது ஏலத்தில் விற்கப்படும். விற்ற முதல் தொகையிலிருந்து கட்டணத்தையும் தீனிச் செலவுகளையும் கழித்து பிறகு எஞ்சிய தொகையை உரியவர்களிடம் கொடுக்கப்படும். கால்நடையின் சொந்தக்காரர் விற்ற முதல் தொகையை விற்பனைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கேட்டுப் பெறுவிட்டால், அது காவல்துறை காரியங்களுக்குப் பயன்படத்தக்க ஏதாவதொரு நிதியில் சேர்க்கப்படும். 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் 60-ம் பிரிவைத் திருத்தி மேலே குறிப்பிட்ட பட்டிக் கட்டணத்தை அதிகரிப்பது குறித்த செயற்குறிப்பு ஆலோசனையில் இருந்து வருகிறது. கால்நடைகள் அலைந்து திரிவதைச் செம்மையாகத் தடுப்பதுதான் இதன் நோக்கமாகும்.

திரு. ஆர். கருப்பையா : இதுபோன்று பட்டிகளில் அடைக்கப்படும் கால்நடைகளின் தீவனத்திற்காக பணம் எடுத்துக் கொண்டாலும்கூட அவைகளுக்கு ஒழுங்காக தீவனம் கொடுக்கப்படுவதில்லை என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, சரியானபடி அவைகளுக்கு தீவனம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் கால்நடைகளுக்கு சரியான தீவனம் போடுகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்னை. பட்டியில் அடைக்கப்பட்ட மாடுகள் சில தீவனம் சரியாக எடுத்துக் கொள்வதில்லை.

திரு. நா. காசிராமன் : நகரில் கட்டுப்பாடின்றி கால்நடைகள் திரிவதால் அதிலும் குறிப்பாக எருமை மாடுகள் திரிவதால் போக்குவரத்து விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் இவற்றைக் கண்டால் வெறித்துக் கொண்டு ஓடும்போது எந்தவிதமான விபத்து ஏற்படும் என்று சொல்ல முடியாத அளவிற்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி காவல்துறை அதிகாரிகளிடம் சொல்லி சட்டத்தை நன்கு இயக்கி இந்தக் கால்நடைகள் திரியாதபடி பார்த்துக் கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : காவல்துறை இது விஷயத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், பொது மக்கள் இந்தப் பழக்கத்தை விட்டு விடவேண்டுமென்று பொது மக்களின் பிரதிநிதிகளான நம் நண்பர் காசிராமன் அவர்களைப் போன்றவர்கள்தான் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பவுண்டில் அடைக்கப்பட்ட கால்நடைகளுக்கு 50 காசு விதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த 50 காசு என்ற அபராதத்தை 2 ரூபாய் அல்லது மூன்று ரூபாய் என்று போட்டால் இதை ஓரளவிற்குத் தடுக்க முடியும். ஆகவே இந்த 50 காசு என்பதை உயர்த்தி மூன்று ரூபாய் என்று வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நண்பர் அவர்கள் என் பதிலில் உள்ள 50 காசு என்ற பகுதியினை மட்டும்தான் கவனித்திருக்கிறார்கள். ஆகவே, அதைவைத்துக் கேட்கிறார். பதிலின் இறுதியில் அந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். அதை விவாதிக்கிறபோது மூன்று ரூபாய் என்று திரு. ராமசாமி அவர்கள் சொன்னதை நினைவில் வைத்துக்கொள்வேன்.

Screening of Hindi films

* 44 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to offer police protection to the screening of Hindi films in Madras City theatres?